# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
## இரண்டாம் தவணைப் பரீட்சை -2023
## புவியியல் – II

**தரம் - 11** | 61 | T | II

- ✶ இவ்வினாத்தாள் I,II என்னும் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.
- ✶ பகுதி I இலுள்ள வினா கட்டாயமானது. அதில் (அ),(ஆ), (இ) ஆகிய மூன்று பிரிவுகளுக்கும் விடை எழுதுதல் வேண்டும்
- ✶ பகுதி II இலிருந்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுதல் வேண்டும்.
- ✶ எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுத வேண்டும்.

### பகுதி -I

*1.* (அ) உமக்குத் தரப்பட்டுள்ள **1: 50, 000** என்னும் அளவுத் திட்டத்திலமைந்த இடவிளக்கப் படத்தின் பகுதியை நன்கு அவதானித்து அதன் அடிப்படையில் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவதற்கு உமக்கு வழங்கப்பட்ட தாளினைப் பயன்படுத்துக.

**(i) தொடக்கம் (iv) வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

(i) இல1 இனால் குறித்துக் காட்டப்படும் அம்சம் யாது?
**(சேனைப் பயிர்ச்செய்கை /**வெளியரும்பிய பாறை / **கற்குழி)** *(01 புள்ளி)*

(ii) இல *2* இனால் குறித்துக் காட்டப்படும் பயிர்ச்செய்கை நடவடிக்கை
**(பற்றைக் காடு / காடு / புல்நிலம்)** *(01 புள்ளி)*

(iii) இல *3* இனால் குறித்துக் காட்டப்படுவது என்ன?
**(வாடிவீடு / விடுதி / வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடம்)** *(01 புள்ளி)*

(iv) இல *4* இனால் குறித்துக் காட்டப்படும் நிர்வாக எல்லை
**(மாகாண எல்லை / மாவட்ட எல்லை / நகரசபை எல்லை.)** *(01 புள்ளி)*

- (v) தொடக்கம் (ix) வரை தரப்பட்டுள்ள வினாக்களுக்குப் பொருத்தமான விடையை எழுதுக.

(v) ஆங்கில எழுத்து B குறித்துக் காட்டும் அம்சத்தைப் பெயரிடுக. *(01 புள்ளி)*

(vi) தரப்பட்ட படப்பிரதேசத்தில் பயிரிடப்படும் பெருந்தோட்டப் பயிரைக் குறிப்பிடுக. *(01 புள்ளி)*

(vii) படத்தில் A என்னும் எழுத்தினால் காட்டப்படும் சதுர அடைப்பிடப்பட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள பொதுச் சேவை நிறுவனங்கள் இரண்டு குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(viii) படப்பிரதேசத்தில் குளங்கள் அதிகமாகக் காணப்படுகின்றது. ச/ பி *(01 புள்ளி)*

(ix) படப்பிரதேசத்தின் மேற்குப் பகுதியில் பிரதான வீதிகள் அடர்த்தியாகக் காணப்படுகின்து. ச/ பி *(01 புள்ளி)*

(ஆ) உமக்குத் தரப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படத்தினைக் கவனமாகப் அவதானித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக உலகப் புறவுருவப் படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரல் கூட்டினைப் பயன்படுத்துக.

(i) தொடக்கம் (v) வரையுள்ள ஒவ்வொரு விளைவுக்கும் எதிரே மூன்று ஆங்கில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைக் குறிக்கும் எழுத்தைப் படத்திலிருந்து தெரிவு செய்து படத்தின் அருகிலுள்ள நிரலில் ஒவ்வொரு வினா இலக்கத்திற்கும் எதிரெயுள்ள கூட்டினுள் எழுதுக.

| | | |
|---|---|---|
| (i) | நுல்லபார் சமவெளி | W, X, Y |
| (ii) | மகலன் தொடுகடல் | Q, R, S |
| (iii) | கொங்கோ நதி | M, N, O |
| (iv) | நியூயோர்க் நகரம் | K, T, U |
| (v) | பால்டிக் கடல் | D, E, F |

*(05 புள்ளிகள்)*

(இ) உமக்குத் தரப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தினைக் கவனமாகப் பரிசீலித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக. விடை எழுதுவதற்காக இலங்கைப் புறவுருவப் படத்தின் அருகே தரப்பட்டுள்ள நிரல் கூட்டினைப் பயன்படுத்துக.

| | | |
|---|---|---|
| (i) | நிலாவெளி | Q, R, S |
| (ii) | வெலிகம குடா | P, T, U |
| (iii) | பராக்கிரம சமுத்திரம் | W, X, Y |
| (iv) | வில்பத்து சரணாலயம் | A, B, C |
| (v) | கட்டுநாயக்க | J, K, L |

*(05 புள்ளிகள்)*

## பகுதி -II

2. (i) புவியோட்டின் இரண்டு பகுதிகளையும் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) கீழே தரப்பட்டுள்ள நாடுகள் அமைந்துள்ள புவித்தகடுகளைப் பெயரிடுக.

(a) இந்தியா

(b) யப்பான்

(c) கியூபா *(03 புள்ளிகள்)*

(iii) மூடிப் பகுதியின் ஐந்து விசேட பண்புகளைத் தருக. *(05 புள்ளிகள்)*

3. (i) தேயிலைப் பயிர்ச்செய்கையைத் தீர்மானிக்கம் இரண்டு பௌதிகக் காணரிகளைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) இலங்கையின் தேயிலைப் பயிர்ச்செய்கைப் பிரதேசங்களை உயரத்தின் அடிப்படையில் வகைப்படுத்துக. *(03 புள்ளிகள்)*

(iii) தேயிலைப் பயிர்ச்செய்கையின் விருத்தியினால் இலங்கையின் பொரளாதாரத்தில் ஏற்படும் மூன்று நன்மைகளைக் குறிப்பிட்டு, சுருக்கமாக விளக்குக. *(05 புள்ளிகள்)*

*4.* (i) கைத்தொழில்களின் அமைவிடத்தில் செல்வாக்குச் செலுத்தும் இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) இரும்புருக்கு கொண்டுள்ள சிறப்பியல்புகள் மூன்று எழுதுக. *(03 புள்ளிகள்)*

(iii) இரும்புருக்குக் கைத்தொழிலின் அண்மைக்காலப் போக்குகள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக. *(05 புள்ளிகள்)*

*5.* (i) குடிசைக் கைத்தொழில் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) கீழே தரப்பட்டுள்ள பிரதேசங்களில் தயாரிக்கப்படுகின்ற கைத்தொழில் உற்பத்திகளைக் குறிப்பிடுக.

(a) அம்பலாங்கொட

(b) மொரட்டுவ

(c) ரட்டவடுன்ன *(03 புள்ளிகள்)*

(iii) குடிசைக் கைத்தொழில் அபிவிருத்திக்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக. *(05 புள்ளிகள்)*

*6.* (i) (a) உலகில் பிரதான காரீய உற்பத்தி நாடு

(b) உலகில் உயர்வகைக் காரீயம் காணப்படும் நாடு

என்பவற்றை முறையே குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) இலங்கையில் காரியம் அகழ்ந்தெடுக்கப்படும் சுரங்கங்கள் அமைந்துள்ள பிரதேசங்கள் மூன்று குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(iii) காரீயம் கைத்தொழில் தொடர்பாக எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் இரண்டினைக் குறிப்பிட்டு, சுருக்கமாக விளக்குக. *(05 புள்ளிகள்)*

7. (i) இயற்கைத் தாவரப் பரம்பலைத் தீர்மானிக்கும் இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) கீழே தரப்பட்டுள்ள பண்புகளைக் கொண்ட தாவரங்கள் பரம்பிக் காணப்படும் காடுகளை முறையே தருக.

(a) விரைவான தாவர வளர்ச்சி

(b) மரங்கள் கூம்பு வடிவமானவை

(c) குளிர் பருவத்தில் மரங்களின் இலைகள் உதிர்தல் *(03 புள்ளிகள்)*

(iii) உலகில் அயன மண்டல மழைக்காடுகள் அழிவடைவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் இரண்டினை விளக்குக. *(05 புள்ளிகள்)*

8\. (i) உலக சனத்தொகையில்

(a) அதிக சனத்தொகை வாழும் கண்டம்

(b) மிகக் குறைந்த சனத்தொகை வாழும் கண்டம்

என்பவற்றை முறையே பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) உலகில் சனத்தொகை அடர்த்தி கூடிய மூன்று பிரதேசங்களைப் பெயரிடுக *(03 புள்ளிகள்)*

(iii) சனத்தொகையின் சமனற்ற பரம்பலைத் தீர்மானிக்கும் பௌதிகக் காரணிகள் இரண்னைச் சுருக்கமாக விளக்குக. *(05 புள்ளிகள்)*